# பயங்கரவாதச் சட்டம் 2000 இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கான லெட்டர் ஆஃப் ரைட்ஸ்

நீங்கள் காவல் நிலையத்தில் தடுப்புக் காவலில் இருக்கும்போது ஸ்காட்லாந்தில் உள்ள சட்டத்தின் கீழ் உங்கள் உரிமைகள் பற்றிய முக்கியமான தகவல்களை இந்தத் துண்டுப்பிரசுரம் வழங்குகிறது. தடுப்புக்காவலில் உங்கள் முக்கிய உரிமைகள் பற்றி இந்த ஆவணம் கூறுகிறது. இது சட்ட ஆலோசனை அல்ல, இது உங்கள் உரிமைகள் பற்றிய அனைத்தையும் உங்களுக்குச் சொல்லாது. நீங்கள் உங்கள் சொந்த சுயாதீன சட்ட ஆலோசனையை நாடவேண்டும்.

இந்தத் தகவலை முடிந்தவரை விரைவில் படிக்கவும். நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும்போது முடிவுகளை எடுக்க உங்களுக்கு இது உதவும். இந்தத் துண்டுப்பிரசுரத்தில் உங்களுக்குப் புரியாத எதற்கும் விளக்கம், எளிதாகப் படிக்கக்கூடிய நகல் அல்லது மொழிபெயர்ப்புத் தேவை என்றால், காவலரிடம் கேட்கவும்.

**உங்கள் உரிமைகளை நினைவில் கொள்ளுங்கள்:**

- காவல் துறை உங்களை ஏன் காவலில் வைத்திருக்கிறது என்பதை அறிய உங்களுக்கு உரிமை உண்டு.
- நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கிறீர்கள் என்று ஒரு வழக்கறிஞரிடம் சொல்ல உங்களுக்கு உரிமை உண்டு. இது இலவசம்.
- உங்களின் நலனில் அக்கறையுள்ள வேறொருவரிடம் நீங்கள் காவல் துறையிடம் இருப்பதாகக் கூற உங்களுக்கு உரிமை உண்டு. உதாரணமாக, அது ஒரு குடும்ப உறுப்பினர், அக்கறை கொண்டவர் அல்லது நண்பராக இருக்கலாம்.
- நீங்கள் அமைதியாக இருக்க உங்களுக்கு உரிமை உண்டு. காவல் துறையினர் கேட்கும் எந்த கேள்விக்கும் நீங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் உங்கள் பெயர், முகவரி, பிறந்த தேதி, நீங்கள் எங்கு பிறந்தீர்கள் மற்றும் உங்கள் குடியுரிமை ஆகியவற்றை அவசியம் கொடுக்க வேண்டும்.
- காவல் துறையினர் உங்களிடம் கேள்விகளைக் கேட்பதற்கு முன், ஒரு வழக்கறிஞரிடம் தாமதமின்றி தனிப்பட்ட முறையில் பேச உங்களுக்கு உரிமை உண்டு. காவல் துறையினர் உங்களிடம் கேள்விகள் கேட்கும் போது நீங்கள் எந்த நேரத்திலும் ஒரு வழக்கறிஞரிடம் பேசலாம்.
- நீங்கள் 16 வயதிற்குட்பட்டவர் அல்லது 18 வயதிற்குட்பட்டவர் மற்றும் கட்டாய மேற்பார்வை ஆணைக்கு உட்பட்டவர் என்றால், காவல் நிலையத்தில் உங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உங்களைச் சந்திக்க உங்களுக்கு உரிமை உண்டு.
- அவசர மருத்துவ உதவிக்கு உங்களுக்கு உரிமை உண்டு.
- காவல் துறையினர் உங்களை நடத்திய விதம் குறித்துப் புகார் அளிக்க உங்களுக்கு உரிமை உண்டு.

## உங்கள் உரிமைகள்

தயவுசெய்து கவனிக்கவும்: விதிவிலக்கான சூழ்நிலைகளில், இந்த உரிமைகளில் சிலவற்றிற்கு உங்களுக்கு உள்ள அணுகலைத்தாமதப்படுத்த அல்லது தடுத்து நிறுத்த, காவல் துறைக்கு உரிமை உண்டு. உதாரணமாக, மற்றொரு நபர் காயப்படுவதைத் தடுக்க உங்களுடன் காவல் துறையினர் பேச வேண்டும் என்று நினைத்தால். **இது நீங்கள் மௌனமாக இருக்க உங்களுக்கு உள்ள உரிமையை உள்ளடக்காது.**

### 1. காவல் துறை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களுக்கான தகவல்

- **எதற்காக நீங்கள் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்கள் என்பது பற்றித் தெரிந்து கொள்வது**

நீங்கள் ஏன் கைது செய்யப்பட்டீர்கள் மற்றும் பயங்கரவாதத்தை நடத்துவது, ஆயத்தம் செய்வது அல்லது தூண்டுவது ஆகியவற்றில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படுகிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் காவல் துறை உங்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டும்.

காவல் நிலையத்தில், நீங்கள் ஏன் காவலில் வைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் நம்புகிறார்கள் என்பதைக் காவல் துறை உங்களுக்குச் சொல்ல வேண்டும். பயங்கரவாதத்தில் உங்களின் சந்தேகத்திற்குரிய ஈடுபாடு பற்றி உங்களிடம் ஏதேனும் கேள்விகள் கேட்கப்படுவதற்கு முன், காவல் துறை உங்களுக்கோ அல்லது உங்கள் வழக்கறிஞருக்கோ நீங்கள் என்ன செய்தீர்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்பதைப் பற்றிய போதுமான தகவலை வழங்க வேண்டும், இதனால் நீங்கள் உங்களை தற்காத்துக் கொள்ளலாம் ஆனால் காவல் துறை விசாரணைக்குத் தீங்கு விளைவிக்காமல் செய்ய வேண்டும்.

- **மௌனத்திற்கான உரிமை**

நீங்கள் என்ன செய்தீர்கள் என்று காவல் துறை நினைக்கிறார்களோ, அது பற்றி அவர்கள் உங்களிடம் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க வேண்டியதில்லை.

உங்கள் வழக்கு நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டால், நீங்கள் கூறுவது எதுவும் எழுதப்படும் அல்லது பதிவுசெய்யப்படும் மற்றும் விசாரணையில் ஆதாரமாகப் பயன்படுத்தப்படும்.

உங்கள் பெயர் மற்றும் முகவரி, பிறந்த தேதி, பிறந்த இடம் மற்றும் நாட்டுரிமை ஆகிய விவரங்களைக் கேட்கும்போது, நீங்கள் காவல் துறையினரிடம் தெரிவிக்க வேண்டும்.

- **நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கிறீர்கள் என்று ஒரு வழக்கறிஞரிடம் கூறுதல்**

நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கிறீர்கள் என்று ஒரு வழக்கறிஞரிடம் சொல்லும்படி காவல் துறையினரிடம் நீங்கள் கேட்கலாம். அது உங்கள் சொந்த வழக்கறிஞராக இருக்கலாம் அல்லது உங்களுக்கு ஒரு வழக்கறிஞரைத் தெரியாவிட்டால், ஆன்-கால் வழக்கறிஞராக இருக்கலாம். ஒரு வழக்கறிஞரை எவ்வளவு விரைவில் முடியுமே அவ்வளவு சீக்கிரம் தொடர்பு கொள்ள காவல் துறை ஏற்பாடு செய்யும். இதற்குக்கட்டணம் கிடையாது.

நீங்கள் காவல் நிலையத்தில் இருப்பதாக உங்கள் நலனில் அக்கறை உள்ள வேறு ஒருவரிடம் சொல்லுவது.

நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கிறீர்கள் என்று அவர்களுக்கு தெரிவிக்க வேறொருவரைத் தொடர்பு கொள்ளுமாறு காவல் துறையினரிடம் நீங்கள் கேட்கலாம். அவர்கள் உங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரான, உங்கள் வாழ்க்கைத்துணை, உங்கள் பராமரிப்பாளர், உங்கள் நண்பர் அல்லது உங்களுக்குத் தெரிந்த மற்றொரு நபராக இருக்கலாம். அவர்களால் முடிந்தவரை விரைவில் உங்களுக்காக ஒருவரைத் தொடர்புகொள்வார்கள்.

## நீங்கள் 16 வயதிற்குட்பட்டவர் (அல்லது 18 வயதிற்குட்பட்டவர் மற்றும் கட்டாய மேற்பார்வை ஆணைக்கு உட்பட்டவர்) என்றால்

- நீங்கள் காவல்நிலையத்தில் இருப்பதை உங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் தெரிவிக்க காவல் துறை முயற்சிக்க வேண்டும்.
- உங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் காவல்  நிலையத்தில் வந்து உங்களுக்கு ஆதரவளிக்கலாம்.

- **உங்களுக்கு உதவ ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பெறுதல்**

நீங்கள் ஆங்கிலம் பேச மாட்டீர்கள் அல்லது புரிந்து கொள்ள மாட்டீர்கள் என்றால், உங்களுக்கு உதவ உங்கள் மொழியைப் பேசும் ஒருவரை (மொழிபெயர்ப்பாளர்) காவல் துறை ஏற்பாடு செய்யும். இது இலவசம். காவல் நிலையத்தில் என்ன பேசுகிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது முக்கியம் ஆகும்.

நீங்கள் காது கேளாதவராக இருந்தால் அல்லது தெளிவாகத் தொடர்பு கொள்வதில் சிக்கல் இருந்தால், உங்களுக்கு உதவ யாரையாவது காவல்துறை ஏற்பாடு செய்யும். அது ஒரு பிரிட்டிஷ் சைகை மொழி மொழிபெயர்ப்பாளராகவோ அல்லது மற்றொரு பொருத்தமான தொழில்முறை நிபுணராகவோ இருக்கலாம். இது இலவசம்.

- **நீங்கள் பிரிட்டிஷ் குடிமகன் இல்லை என்றால்**

நீங்கள் பிரிட்டிஷ் குடிமகன் இல்லை என்றால், உங்கள் உயர் ஆணையம், தூதரகம் அல்லது துணைத் தூதரகத்தைத் தொடர்புகொண்டு, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள், ஏன் காவல் நிலையத்தில் இருக்கிறீர்கள் என்பதை அவர்களிடம் தெரிவிக்குமாறு நீங்கள் காவல் துறையிடம் கேட்கலாம். அவர்கள் உங்களை தனிப்பட்ட முறையில் சந்திக்கலாம் மற்றும் உங்களைப் பார்க்க ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்யலாம்.

- **உங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டால் என்ன நடக்கும்?**

உங்கள் மீது ஒரு குற்றத்துக்காக குற்றம் சாட்டப்பட்டால், நீங்கள் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்படலாம் அல்லது காவல் நிலையத்தில் வைத்திருந்து அடுத்த வேலை நாளில் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படலாம். அல்லது குறிப்பிட்ட தேதியில் நீதிமன்றத்திற்குச் செல்ல நீங்கள் ஒப்புக்கொண்டால் நீங்கள் விடுவிக்கப்படலாம்.

- **ஆவணங்களுக்கான அணுகல்**

உங்கள் வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றால், வழக்கின் ஆதாரத்திற்கான குறிப்பு உங்களுக்கோ அல்லது உங்கள் வழக்கறிஞருக்கோ வழங்கப்படும். இது உங்களுக்கோ அல்லது உங்கள் வழக்கறிஞருக்கோ உங்கள் பாதுகாப்பைத் தயார் செய்ய அனுமதிக்கும்.

உங்களுக்கு ஆங்கிலம் புரியவில்லை என்றால் தொடர்புடைய தகவலின் மொழிபெயர்ப்புக்கு உங்களுக்கு உரிமை உண்டு.

- **மருத்துவ உதவிக்கான அணுகல்**

உங்கள் உடல்நலம் மற்றும் நல்வாழ்வு குறித்து காவல் துறையினர் உங்களிடம் கேள்விகளைக் கேட்பார்கள். உங்களுக்கு மருத்துவ நோய்நிலை இருந்தாலோ அல்லது மருந்து உட்கொண்டாலோ காவல் துறையினருக்குத் தகவல் தெரிவிப்பது அவசியம். நீங்கள் ஏதேனும் போதைப்பொருள் அல்லது குடிப்பழக்கத்துக்கு அடிமை என்றால் அல்லது உங்களுக்கு நீங்களே தீங்கு விளைவிக்க நினைத்தால் அதைக் காவல் துறையினரிடம்கூறுவதும் முக்கியம்.

உங்களைப் பரிசோதிக்குமாறு மருத்துவ தொழில் புரிபவரிடம் காவல் துறை கேட்கலாம். இது, நீங்கள் காவலில் இருக்கும்போது சரியாகக் கவனிக்கப்படுகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்த உதவும். நீங்கள் ஒரு மருத்துவ தொழில் புரிபவரைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தால்,

காவல் துறையினரிடம் சொல்லுங்கள்.

நீங்கள் நோய்வாய்ப்பட்டால், மருத்துவ உதவி பெற உங்களுக்கு உரிமை உண்டு.

- **உணவு மற்றும் பானம்**

கோரிக்கையின் பேரில் உங்களுக்கு தண்ணீர் வழங்கப்படும். நான்கு மணி நேர காலத்துக்கும் மேலாக நீங்கள் காவலில் இருந்தால் உங்களுக்கு உணவு வழங்கப்படும். உங்களுக்கு ஏதேனும் உணவு முறை அல்லது மதத் தேவைகள் இருந்தால், முடிந்தவரை சீக்கிரம் காவல் துறைக்குத் தெரிவிக்கவும்.

- **ஒரு புகார் அளித்தல்**

நீங்கள் காவலில் இருக்கும்போது புகார் செய்ய விரும்பினால், இன்ஸ்பெக்டர் அல்லது உயர் பதவியில் உள்ள ஒருவரிடம் பேசுங்கள். நீங்கள் விடுவிக்கப்பட்ட பிறகு புகார் செய்ய விரும்பினால், நீங்கள் எந்தவொரு காவல் நிலையத்திற்கும் செல்லலாம் அல்லது 101 ஐ அழைக்கலாம். உங்கள் எழுத்துப்பூர்வ ஒப்புதலை வேறொருவருக்கு வழங்கியிருக்கும் போது, உங்கள் சார்பாக புகார் செய்யுமாறு அவரை நீங்கள் கேட்கலாம். அது பெற்றோர், நண்பர், வாழ்க்கைத்துணை அல்லது நீங்கள் நம்பும் ஒருவராக இருக்கலாம்.

நீங்கள் கைது செய்யப்படும் போது அல்லது காவல் துறை காவலில் இருக்கும் போது நீங்கள் ஒரு காவல் துறை அதிகாரியால் தாக்கப்பட்டாலோ அல்லது காயப்படுத்தப்பட்டாலோ நீங்கள் போலிஸ் ஸ்காட்லாந்து ப்ரோஃபஷனல் ஸ்டாண்டர்ட்ஸ் டிபார்ட்மெண்ட் இடம் புகார் செய்ய வேண்டும்.

### உங்களுக்கு கூடுதல் ஆதரவு தேவைப்பட்டால் (தயவுசெய்து கவனிக்கவும், இது ஒரு சேவையைப் பற்றிய தகவல் மட்டுமே மற்றும் இது உரிமையல்ல):

நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும்போது என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவி தேவைப்படலாம். ஒரு பொருத்தமான வயது வந்தோர் (அப்ரோப்ரியேட் அடல்ட்) எனப்படும் ஆதரவு நபர் மூலம் இந்த உதவியை வழங்க முடியும். உங்களுக்கு மனநல கோளாறு அல்லது கற்றல் குறைபாடு இருந்தால் இது உங்களுக்குப் பொருந்தும். உங்களுக்கு இந்த ஆதரவு தேவை என்று நீங்கள் நினைத்தால் காவல் துறையினரிடம் பேசுங்கள்.

உங்களுக்கு ஒரு அப்ரோப்ரியேட் அடல்ட் உடைய ஆதரவு தேவை என்று காவல் துறை நினைத்தால், நீங்கள் ஒருவரைக் கேட்காவிட்டாலும், அவர்கள் ஒருவரை வந்து உதவுமாறு கேட்பார்கள்.

## 2. காவல் துறை விசாரணைக்கு செல்லும் நபர்களுக்கான தகவல்

- **உங்களுக்கு உதவ ஒரு வழக்கறிஞரைப் பெறுதல்**

நீங்கள் ஒரு வழக்கறிஞரிடம் பேச விரும்பினால் காவல் துறையினரிடம் சொல்லுங்கள். உங்களுக்காக காவல் துறை கூடிய விரைவில் ஒரு வழக்கறிஞரைத் தொடர்புகொள்வார்கள்.

ஒரு வழக்கறிஞரின் பங்கு , உங்கள் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் சட்டத்தைப் பற்றிய ஆலோசனைகளை வழங்குவதாகும்.

உங்களுக்குத் தெரிந்த வழக்கறிஞர் அல்லது ஆன்-கால் வழக்கறிஞரிடம் பேசுவதை நீங்கள் தேர்வு செய்யலாம். இந்த வழக்கறிஞர் சுயாதீனமானவர் மற்றும் காவல் துறையினருக்காகப் பணியாற்றுவதில்லை.

அவர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை வழங்க முடியுமா அல்லது நீங்கள் ஆலோசனைக்கு பணம் செலுத்த வேண்டுமா என்று வழக்கறிஞர் உங்களுக்குச் சொல்வார். நீங்கள் பணம் செலுத்த வேண்டும் என்றால், எவ்வளவு செலவாகும், எப்படி செலுத்தலாம் என்பதை அவர்கள் விளக்குவார்கள். உங்கள் வழக்கறிஞருக்கு காவல் துறை பணம் கொடுக்காது அல்லது உங்கள் வழக்கறிஞருக்கு எவ்வாறு பணம் வழங்கப்படுகிறது என்பதைப் பற்றி பேச மாட்டார்கள்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக, ஒரு விஷயமாகவோ அல்லது அவசரமாகவோ உங்களிடம் கேள்விகள் கேட்கப்பட வேண்டி இருந்தாலன்றி, காவல் துறை உங்களிடம் கேள்விகளைக்

கேட்பதற்கு முன், ஒரு வழக்கறிஞருடன் தனிப்பட்ட உரையாடலை நடத்த நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.

ஒரு வழக்கறிஞரிடம் பேசுவது பற்றி எந்த நேரத்திலும் நீங்கள் உங்கள் மனதை மாற்றிக்கொள்ளலாம். முடிந்தவரை விரைவில் காவல் துறையினரிடம் அதனைச் சொல்லுங்கள், அவர்கள் உங்களுக்காக ஒரு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்வார்கள்.

வழக்கறிஞர் தான் வருவதாகக் கூறிய போதும் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால், அல்லது நீங்கள் மீண்டும் வழக்கறிஞரிடம் பேச வேண்டும் என்றால், காவல் துறையிடம் மீண்டும் வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ளும்படி கேளுங்கள்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக வழக்கறிஞர் கலந்துகொள்ளும் முன் உங்களிடம் அவசரக் கேள்விகள் கேட்கப்பட வேண்டி இருந்தாலன்றி, காவல் துறை உங்களிடம் கேள்விகளைக் கேட்கும்போது வழக்கறிஞரை உங்களுடன் அறையில் வைத்திருக்க உங்களுக்கு உரிமை உண்டு.

## • விசாரணைக்காக எவ்வளவு காலம் உங்களை தடுத்து வைக்க முடியும்?

உங்கள் மீது குற்றம் சுமத்தாமல் 48 மணிநேரம் வரை விசாரணைக்காக காவல் துறை உங்களைக் காவலில் வைக்கலாம். ஒரு மூத்த காவல் துறை அலுவலர், நீங்கள் இன்னும் காவலில் வைக்கப்பட வேண்டுமா என்று பார்க்க அவ்வப்போது உங்கள் வழக்கைப் பார்க்க வேண்டும். இது மீளாய்வு எனப்படும். நீதிமன்றம் அனுமதித்தால் மட்டுமே 48 மணிநேரத்திற்கு மேல் உங்களை காவலில் வைக்க முடியும். நீங்கள் கைது செய்யப்பட்டதில் இருந்து அதிகபட்சம் 14 நாட்கள் வரை குற்றம் சாட்டப்படாமல் காவலில் இருக்கும் காலத்தை நீதிமன்றம் நீட்டிக்க முடியும். இந்தச் சூழ்நிலைகளில், உங்களுக்குப் பின்வருவன வழங்கப்பட வேண்டும்:

- உங்கள் காவலை நீட்டிக்க விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என்பதற்கான எழுத்துப்பூர்வ ஆவணம்;
- விண்ணப்பம் செய்யப்பட்ட நேரம்;
- நீதிமன்றத்தில் விண்ணப்பம் விசாரிக்கப்படும் நேரம்; மற்றும்
- மேலும் தடுப்புக்காவல் கோருவதற்கான காரணம்(கள்).

ஒவ்வொரு முறையும் உங்கள் காவலை நீட்டிக்க அல்லது மேற்கொண்டு நீட்டிக்க விண்ணப்பம் செய்யப்படும் போது உங்களுக்கு (மற்றும் உங்கள் சட்டப் பிரதிநிதிக்கு) ஒரு அறிவிப்பு வழங்கப்பட வேண்டும்.

நீங்கள் தகுதியான நிலையில் இல்லை என்றால் தவிர, இந்த முடிவைப் பற்றி உங்கள் கருத்தைக் கூற உங்களுக்கும் உங்கள் வழக்கறிஞருக்கும் உரிமை உண்டு. ஒரு வழக்கறிஞர் இதைப் பற்றி உங்களுக்கு ஆலோசனை கூறலாம்.

## • சுயாதீன தடுப்புக்காவல் பார்வையாளர்கள்

காவல் நிலையங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படும் சமூக உறுப்பினர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் சுயாதீன தடுப்புக்காவல் பார்வையாளர்கள் என்று அழைக்கப்படுவார்கள் மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மக்கள் முறையாக நடத்தப்படுவதையும் அவர்கள் தங்கள் உரிமைகளை அணுகுவதையும் உறுதிசெய்ய தன்னார்வ அடிப்படையில் செயல்படுகிறார்கள்.

ஒரு சுயாதீன தடுப்புக்காவல் பார்வையாளரைப் பார்க்கவோ அல்லது உங்களைச் சந்திக்கும்படி அவர்களிடம் கேட்கவோ உங்களுக்கு உரிமை இல்லை, ஆனால் ஒரு பார்வையாளர் உங்களைப் பார்க்க வேண்டும் என்று கேட்கலாம். நீங்கள் தடுப்புக்காவலில் இருக்கும் போது ஒரு சுயாதீன தடுப்புக்காவல் பார்வையாளர் உங்களைச் சந்தித்தால், உங்கள் நலன் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க அவர்கள் காவல் துறையைச் சார்ந்திருக்காமல், செயல்படுவார்கள். அவர்களிடம் பேச விரும்புவது என்பது உங்கள் விருப்பம்.